## இயல் - 1.எங்கள் தமிழ்

வகுப்பு: VII

பாடம் : தமிழ்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் _________.

    **அ. வழி**  ஆ.குறிக்கோள்  இ.கொள்கை  ஈ.அறம்

2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

    அ.குரல்+யாகும்  **ஆ.குரல்+ஆகும்**  இ.குர+லாகும்  ஈ.குர+ஆகும்

3. வான்+ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_________.

    **அ.வானொலி**  ஆ.வான் ஒலி  இ.வாவொலி  ஈ.வானெலி

**ஆ. நயம் அறிக:**

1.'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ.கா) அருள்நெறி - அதுவே

கொல்லா - கொள்கை

அன்பும் - அச்சம்

2. 'எங்கள் தமிழ் பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ-கா) அருள் - பொருள்

கொல்லா - எல்லா

அன்பும் - இன்பம்

AAMSKOSAVAPATY

3. 'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

(எ-கா) தரலாகும் - குரலாகும்

புகழாது - இகழாது

ஊக்கிவிடும் - போக்கிவிடும்

## இ. குறுவினா:

1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி என்று தமிழ் மொழியின் பண்புகள் பற்றி நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

2. தமிழ்மொழியை கற்றவரின் இயல்புகளை எழுதுக.

தமிழ்மொழியைக் கற்றவர்கள்,பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்,தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.

## ஈ. சிறுவினா

1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

நம் தாய்மொழியாம் தமிழ்மொழி,அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

AAMS KOSAVAPATTY

தமிழ்மொழியைக் கற்றவர்கள்,பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்.தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.

கொல்லாமையைக் குறிகோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு,எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.அ∘∘து அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்.

எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி என்று தமிழ் மொழியின் பண்புகள் பற்றி நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

## **உ. சிந்தனை வினா**

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

தமிழைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம்.

நம் கவிஞர் எங்கள் தமிழ் என்னும் கவிதையில், நம் தமிழ் மொழியானது அன்பையும் அறத்தையும் தூண்டக்கூடியது.

தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.

தேன் சாப்பிடச் சாப்பிட உடல் வளம் பெருகும்.

தமிழ் கற்க கற்க உள்ளம் வளம் பெருகும்.

அதனால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

AAMSKOSAVAPATTY

## 1. ஒன்றல்ல இரண்டல்ல

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம்________.

அ.கலம்பகம் ஆ.பரிபாடல் இ.பரணி ஈ. அந்தாதி

2. வானில் _____ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

அ.அகில் ஆ.முகில் இ.துகில் ஈ.துயில்

3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது________.

அ. இரண்டு+டல்ல ஆ.இரண்+அல்ல

இ.இரண்டு+இல்ல ஈ.இரண்டு+அல்ல

4. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

அ.தந்து+உதவும் ஆ.தா+உதவும் இ.தந்து+தவும் ஈ.தந்த+உதவும்

5. ஒப்புமை+இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்_______.

அ.ஒப்புமைஇல்லாத ஆ.ஒப்பில்லாத

இ. ஒப்புமையில்லாத ஈ.ஒப்புஇல்லாத

### ஆ. குறுவினா

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

வீசும் தென்றலில் தேன் மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ் நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும் என்று கூறுகிறார்.

AAMSKOSAVAPATTY

2. ‘ஒன்றல்ல இரண்டல்ல ’ – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

முல்லைக்குத் தேர் தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல்.

இவர்கள்போல் புகழ் பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு ஒன்றிரண்டல்ல பலவாகும்.

## இ. சிறுவினா

1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். அத்தோடு இசைப்பாடலான பரிபாடலும் கலம்பக நூல்களும் எட்டுத்தொகையும் வான்புகழ் கொண்ட திருக்குறளும் அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்களும் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

## ஈ. சிந்தனை வினா

1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?

“அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே” என்பது தண்டியலங்கார நூற்பா கூறுகிறது. மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் என்பது

AMSKOSAVAPATTY

இதன் கருத்து. தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச் சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு.

இந்தியப் பொதுச் சிந்தனை மரபின்படி அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் அடைய வேண்டியவை. தமிழ் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம், பொருள், இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.

இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட, தமிழில் தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன. நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாக திகழ்வது திருக்குறள். நம்முடைய மானுடர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடும்போது அவற்றை திருத்திக் கொள்ள அறக்கருத்துகளையும் நீதிக் கருத்துகளையும் போதிக்கும் தேவை ஏற்படுகிறது. அதனால் தோன்றிய இலக்கியங்கள் தான் அற இலக்கியங்கள் ஆகும்.

## 1. பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மொழியின் முதல் நிலை பேசுதல், _______ ஆகியனவாகும்.

அ) படித்தல் **ஆ) கேட்டல்** இ) எழுதுதல் ஈ) வரைதல்

2. ஒலியின் வரிவடிவம் ________ ஆகும்.

அ) பேச்சு **ஆ) எழுத்து** இ) குரல் ஈ) பாட்டு

3. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று ________

அ) உருது ஆ) இந்தி **இ) தெலுங்கு** ஈ) ஆங்கிலம்

AAMSKOSAVAPATTY

4. பேச்சுமொழியை _______ வழக்கு என்றும் கூறுவர்

அ) இலக்கிய **ஆ) உலக** இ) நூல் ஈ) மொழி

**ஆ. சரியா தவறா என எழுதுக.**

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **சரி**

2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **சரி**

3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **தவறு**

4. எழுத்து மொழியில் உடல் மொழிக்கு வாய்ப்பு அதிகம். **தவறு**

5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். **சரி**

**இ. ஊடகங்களை வகைப்படுத்துக.**

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

| எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|
| **செய்தித்தாள்** | **தொலைக்காட்சி** |
| **நூல்கள்** | **வானொலி** |
| **மின்னஞ்சல்** | **திரைப்படம்** |

**ஈ. குறுவினா**

1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?

1.பேச்சுமொழி 2.எழுத்துமொழி ஆகும்.

AAMS KOSAVAPATTY

2. பேச்சுமொழி என்றால் என்ன?

மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமமொழி. பேச்சுமொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்; அது கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

3. வட்டாரமொழி எனப்படுவது யாது?

பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

## உ. சிறுவினா

1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.

| எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|
| இலக்கிய வழக்கு என்பர் | உலக வழக்கு என்பர் |
| சொற்கள் முழுமையாக எழுதப்படும். | சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும் |
| உணர்ச்சிக் கூறுகள் குறைவு | உணர்ச்சிக் கூறுகள் அதிகம் |
| உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வும் இணைவதால் அது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது. |

AAMSKOSAVAPATTY

2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் உண்டு. வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படும்.

அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர்.

கன்னடம்,தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

**உ. சிந்தனை வினா**

1. இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கியங்கள் நம் வாழ்வை வளப்படுத்த, வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன.

அற இலக்கியங்கள் வழங்கும் அற்புதமான கருத்துகளைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு பிறரால் பாராட்டப்படும் தன்மையுடையதாக விளங்கும்.

AAMSKOSAVAPATTY

இலக்கியங்கள் வழங்குகின்ற கருத்துகள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு உண்மையை பறைசாற்றுகின்றன.

இதுவே இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு காரணம் ஆகும்.

## 1. சொலவடைகள்

### அ. நெடுவினா.

1. பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்) சிறுகதை

பொம்மலாட்டம் ஒரு கலை, கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்து பின்னணியில் கதை மாந்தர்களை பேச விட்டு கதை சொல்லத் தொடங்குவர். கதை விறுவிறுப்பாக சென்று ஒரு கட்டத்தில் சட்டென்று முடியும். இக்காட்சியைப் பார்த்து சிறுவர் முதல் பெரியவர் வரை பார்த்து மகிழ்வர். இதோ மெல்லிய ஒடிசலான தேகம் கொண்ட நடுத்தர வயதுக்காரர் பொம்மலாட்டம் மூலம் கதையொன்றை சொல்லி அசத்துகிறார். அந்தக் கதையை நாமும் கேட்போமே!

பொம்மலாட்டம் பார்க்க வந்தவர்களை இரு கரம் கூப்பி வணங்கி கதை நாயகனை அறிமுகம் செய்கிறார் கதை சொல்லி.

பள்ளிக்கூடம் போகாமலே பாடங்களை படிக்காமலே ஊரைச் சுற்றுகிறான் பையன். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கல.

AAMSKOSAVAPATTY

“அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது. இப்ப நீ சரிய படிக்கலன்னா வாழ்க்கையிலே முன்னேற முடியாது. ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயி படிக்கிற வேலையைப் பாரு” என்கிறார் அப்பா.

படிக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது முகத்தில் அறைந்தாற் போல் பேசுகிறான் நம் கதைநாயகன். அப்பா சத்தம் போடுகிறார். சத்தம் கேட்டு அம்மா  வெளியே வராங்க, ராசா, உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ளே விலைபோகும். உன்னைய யாரும் ஊர்ல மதிக்கமாட்டங்க. அதனால நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க இது அம்மாவின் உபதேசம்.

வேறு வழியில்லாம பையன் பள்ளிக்கூடம் போகிறான்.  அவனுக்கு படிப்பதில் நாட்டமில்லை, விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்குறான். அங்கே எறும்பு ஒன்னு போய்கிட்டு இருக்கு, “எறும்பே! எறும்பே!  என் கூட விளையாட வர்றியா?” - என்றான் பையன். குடல் கூழுக்கு அழுவுதாம் கொண்டை பூவுக்கு அழுவுதாம் எனக்கு நிறைய வேலை கிடக்கு. நான் கிளம்புறேன். நீ அதோ பறக்குதே அந்தத் தேனீ கூடப் போய் விளையாடு.

“தேனீ! தேனீ! நீ என் கூட விளையாட வர்றியா?” என்றான் பையன்” “உனக்குத்தான் வேலை இல்லை, எனக்குமா வேலை இல்லை. போபோ நான் தேன் எடுக்கனும்” பறந்து போனது தேனீ. பையன் கொஞ்சம் தூரம் நடக்கிறான். பொதிமாடு ஒன்றைப் பார்க்கிறான்.

“மாடே! மாடே! சும்மாதானே இருக்கே என் கூட விளையாட வர்றியா”? என்றான் பையன். “எனக்கு வேலை இருக்கு அந்த ஆமையை போய்பாரு என்றது பொதிமாடு”.

AAMS KOSAVAPATTY

“ஆமையே! ஆமையே! என் கூட விளையாட வர்றியா?” எனக் கேட்டான் பையன். “முயலோட போட்டி வச்சிருக்கேன். எனக்கு உன் கூட விளையாட நேரமில்லே நீ அந்த முயலைப் போய் பாரு” என்றது ஆமை.

முயலை விளையாட அழைத்தான். முயலும் விளையாட மறுத்தது.

கடைசியில் குட்டிச்சுவரில் எகிறி குதித்தான் பையன். குட்டிச் சுவரில் இருந்து எறும்பு, பூச்சி எல்லாம் கோபத்தோடு அவன் கையில கால்ல ஏறி நறுக்கு நறுக்கென்று கடித்தன.

அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு அந்தப் பையன் வலி பொறுக்க முடியாமல் கத்திக் கொண்டே ஓடுறான். அம்மாவைப் பார்த்து “இந்த உலகத்திலே எல்லாரும் அவங்க அவங்க வேலையைப் பாக்குறாங்க ஈ, எறும்பு கூடச் சும்மா இல்லாம வேலை செய்யுதுக. எனக்கு இப்பத்தான் புத்தி வந்தது என்றான் பையன். அம்மா மகனின் மன மாற்றத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தினாள்.

## 1. குற்றியலுகரம்,குற்றியலிகரம்

**அ. கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்பட வகையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

நெடில்தொடர் - **ஆறு, காசு**

ஆய்த்த்தொடர் - **எஃகு**

உயிர்த்தொடர் - **விறகு**

AAMS KOSAVAPATTY

வன்தொடர் - **உழக்கு,எட்டு**

மென்தொடர் - **கரும்பு,பந்து**

இடைத்தொடர் - **கொய்து**

## ஆ. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

1. பசு, விடு, ஆறு, **கரு**

2. பாக்கு, **பஞ்சு**, பாட்டு, பத்து

3. ஆறு, மாசு, பாகு, **அது**

4. **அரசு**, எய்து, மூழ்கு, மார்பு

5. பண்பு, மஞ்சு, கண்டு, **எஃகு**

## இ. குறுவினா

1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.

குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.

கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்பொழுது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும்.

இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

2. குற்றியலிகரம் என்றால் என்ன?

தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறுகி ஒலிக்கும் இகரம் 'குற்றியலிகரம்' எனப்படும். குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

AAMSKOSAVAPATTY

**ஈ. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தரவேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

கோதை கவிதையைப் படித்தாள்.

| வினா | அழுத்தம் தர வேண்டிய சொல் |
|---|---|
| கோதை எதைப் படித்தாள்? | கவிதை |
| கவிதையைப் படித்தது யார்? | கோதை |
| கோதை கவிதையை என்ன செய்தாள்? | படித்தாள் |

**உ. படத்திற்குப் பொருத்தமான திணையை எழுதுக.**



உயர்திணை



அஃறிணை



உயர்திணை

**ஊ. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்

**உயர்திணை:**

முகிலன் கயல்விழி தலைவி

ஆசிரியர் புத்தகம் சுரதா

**அஃறிணை**:

வயல் குதிரை கடல்

புத்தகம் மரம்

**எ. கொடுக்கப்பட்ட தலைப்பைக் கொண்டு கட்டுரை எழுதுக**

**1. முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப் பற்று - தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் - சாதுவன் வரலாறு - நமது கடமை - முடிவுரை.**

**முன்னுரை:**

அன்னைத் தமிழ்! இன்பத் தமிழ்! இனிய தமிழ் ! பைந்தமிழ்! செந்தமிழ்! என பலவாறு போற்றிப் பேசும் நம் தாய் மொழியாம் தமிழ் மொழி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மொழி பற்றிய விளக்கம்:**

மொழி என்பது ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி மொழி. அதைப் பேசும் இனத்தின் கலை, வரலாறு பழக்கவழக்கம் ஒழுக்க நெறிகள் போன்ற பல வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது.

மொழியில் ஒலியே முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஒலிகளை எழுத்து வடிவில் மாற்றலாம். அவை சொற்கள் எனவும் அவற்றுக்கான விதிகள் இலக்கணங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

AAMS KOSAVAPATTY

## தாய் மொழி:

சிறுவயதில் முதன்முதலில் கற்கும் மொழியே தாய்மொழி. குழந்தைக்கு அதன் தாய் கற்றுத்தரும் மொழியே தாய்மொழி. குழந்தையின் உதடுகள் உச்சரிக்கும் முதல் மொழியே தாய்மொழி.

## தாய்மொழிப்பற்று:

தாய்மொழிப்பற்று என்பது தாய்ப்பாசத்தைப் போல தானாக வர வேண்டும். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ் வழியில் கற்றவர்களே தமிழில் பேசுவதை இழிவாக எண்ணுகிறார்கள். இந்நிலை மாறவேண்டும் கையொப்பம் தமிழிலேயே இட வேண்டும் தாய்மொழிப்பற்றுடன் வாழ வேண்டும்.

## தாய்மொழிப்பற்றுக் கொண்ட சான்றோர்:

மொழியைக் காக்க நம் முன்னோர் சங்கங்கள் அமைத்தனர். அகத்தியரும் அவரின் மாணவர் தொல்காப்பியரும் தாய்மொழிப்பற்றுடன் இலக்கணம் தந்தனர். தாய்மொழிப்பற்று மிக்க அதியமான் தமிழுக்காக ஔவைக்கு நெல்லிக்கனி தந்தான். முரசு கட்டிலில் உறங்கிய மோசிகீரனாருக்குக் கவரி வீசினான் பெருஞ்சேரல் இரும்பொறை தமிழ்ப்பற்றால் கலம்பகம் கேட்டு உயிர் துறந்தான் நந்திவர்மன். இவர்களைப் போல் சான்றோர் பலரும் தாய்மொழிப்பற்றுடன் இருந்தனர்.

## சாதுவன் வரலாறு:

கடல் வாணிகம் செய்யச் சென்ற சாதுவன் கலம் உடைந்ததால் நாகர் வாழும் கரையில் ஒதுங்குகிறான். கரை ஒதுங்குபவரைக் கொன்று

AAMSKOSAVAPATY

தின்பவர்கள். அவர்கள்நாகர் மொழி கற்றிருந்ததால் அவர்களின் தாய்மொழியில் பேசி உயிர்பிழைத்து வந்ததாக மணிமேகலை கூறுகிறது.

**நமது கடமை:**

தாய்மொழிப்பற்றுடன் நாம் இருப்பது நம் கடமையாகும். இயன்றவரைத் தாய்மொழியில் பேசி, எழுதி, கையொப்பமிட்டு வருதல் நம் கடமையாகும். நம் தாய்மொழியின் சிறப்புகளை உணர வேண்டும். தாய்மொழியின் பெருமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

**முடிவுரை:**

தாய்மொழி என்பது தாய் சொல்லித்தந்த மொழியன்று. தாய்மை உணர்வோடு பயன்படுத்த வேண்டிய மொழி என்றார் பாரதி. எனவே தாய்மொழிப்பற்றோடு பிறமொழிக் கலப்பின்றித் தூய மொழியில் பேசுவோம். தாய்மொழியைக் காப்போம்.

## மொழியோடு விளையாடு

**அ. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

(எ.கா.) இருதிணை : **உயர்திணை, அஃறிணை**

முக்கனி : **மா,பலா,வாழை**

முத்தமிழ் : **இயல்,இசை,நாடகம்**

நாற்றிசை : **கிழக்கு,மேற்கு,வடக்கு,தெற்கு**

ஐவகைநிலம் : **குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை**

அறுசுவை : **இனிப்பு,துவர்ப்பு,உவர்ப்பு,கார்ப்பு,புளிப்பு,கசப்பு**

AAMS KOSAVAPATHY

**ஆ. கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

(எ.கா.)

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

→

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

→

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

**இ. இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.**

எ.கா.) அரசுக்குத் தவறாமல் வரி செலுத்த வேண்டும்.

ஏட்டில் எழுதுவது வரி வடிவம்.

1. மழலை பேசும் மொழி அழகு.

   இனிமைத் தமிழ் மொழி எமது.

2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை நடை பழகும்.

   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்கு மொழி நடை.

3. நீ அறிந்ததைப் பிறருக்குச் சொல்.

   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது சொல்.

4. உழவர்கள் நாற்று நட வயலுக்குச் செல்வர் .

   குழந்தையை மெதுவாக நட என்போம்.

5. நீதி மன்றத்தில் தொடுப்பது வழக்கு.

AAMSKOSAVAPATTY

‘நீச்சத் தண்ணி குடி’ என்பது பேச்சு வழக்கு.

AAMS KOSAVAPATTY